Registered as a News Paper in Ceylon

P. M. G. No. H. A. 59/300 of 1953.

# இந்துசாதனம்

விரோதி ௵ (1889) ஆவணி மீ 28உ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளிவருவது

தனிப்பிரதி: சதம் 10.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - சுஎ] யாழ்ப்பாணம்:- மன்மத ௵ மாசி மீ ௧௯உ வெள்ளிக்கிழமை (2 MARCH 1956) [இல - ௪அ]

## யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி இந்து வாலிபர் சங்கம்

இக்கழகப் பொதுக்கூட்டத்தில் தென்னிந்தியாவிலே நீண்டகாலம் சைவத் தொண்டும் தமிழ்த் தொண்டும் புரிந்து அண்மையில் எம்மை விட்டுப் பிரிந்த பேராசிரியர் ராவ்சாஹிப் எஸ். வையாபுரிப் பிள்ளையவர்களின் பிரிவைக் குறித்து ஓர் அநுதாபத் தீர்மானம் நிறைவெய்தியது. பெரியாரின் ஞாபகத்தைக் குறித்து இரண்டு நிமிஷ நேரம் அங்கத்தவர்கள் எழுந்து மௌனமாக நின்றனர். இப்பெரியார் சென்னைச் சர்வகலாசாலையிலும் திருவனந்தபுரம் சர்வகலாசாலையிலும் பேராசிரியராகவும் சென்னைச் சர்வகலாசாலைத் தமிழகராதிப் பதிப்பாசிரியர் குழுவின் அங்கத்தவராகவும் கடமையாற்றியமையும் மேற்படி அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றியபொழுது குறிப்பிடப்பட்டது.

அரசியல் அரங்கில்

# எவர், எங்கே, என்ன வேடம்?

—:o:—

## தேர்தல் நாடகம் திரை நீக்கும் வரை தெரியாது

நாடகத்திலே ஒவ்வொரு கோஷ்டியினர் நடிப்பதும் உண்டு. தனித்தனியாகத் திறமை வாய்ந்தவர்களும் அவ்வப்பொழுது ஒருங்கு சேர்ந்து அரங்கிலே தோன்றுவதுமுண்டு.

திடீர் என வந்த தேர்தலிலே நாடக பாத்திரங்கள் யார், என்ன வேடம் என்பது தெரியாத வகையில் ஒரு மர்மம் தோன்றியிருக்கின்றது.

திரு. பண்டார நாயகக் கட்சியிலிருந்து பலர் ஐ. தே. கட்சியை நாடிக் கொண்டிருக்கிறார்கள் என்றும திரு தகநாயகவின் பாஷாபெரமுனை என்ற கூட்டு முயற்சி குலைந்த வண்ணமாயிருக்கிறதென்றும் செய்திகள் உலாவுகின்றன.

மாத்தளைப்பகுதிப் பாராளுமன்ற அங்கத்தவரும் திரு. பண்டாரநாயக கட்சியின் பலமான தூணுமாயிருந்த திரு பேர்காடு அலுவிகாரை என்பவர் அக்கட்சியையும் அவர் தலைவரையும் புறக்கணித்து விட்டு வேறு ஒரு அரங்கிலே வேடம் மாறித் தோன்றப் போகின்றாராம்.

சிங்கக்கொடியேவேண்டுமென்ற ஒரு தமிழ் பேசும அரசியல்வாதி இப்பொழுது சிங்கக்கொடி வேண்டாம என்று மாறிவிட்டார்.

தேர்தல் அபேட்சகர்களை யார் தேடிச் செல்வது? கட்சிக் கொள்கைக்கு அமைந்து பலகாலம் கட்சி அங்கத்தவராக இருப்பவர்கள் அபேட்சகர்களாவதா? அல்லது எக் கட்சியினராயிருந்தாலும் இந்த நேரத்தில் வேடம் மாறித் தோன்றுவதற்கு ஆயத்தமானால் அவர்கள் அபேட்சகர்களாய் அங்கீகரிக்கப்படுவதா? கட்சிக் கட்டுப்பாடு?

### ஒற்றுமையாய்ப் போட்டி

எல்லாக் கட்சிகளும்சேர்ந்து ஒருவழிப்பட்டு அபேட்சகர்களை தெரிவதுஎன்று தமிழ் பேசும் மக்கள் எடுத்தமுயற்சிகள் பயனளிக்கவில்லை. எல்லா இடங்களுக்கும் ஒரே ஒரு அங்கத்தவரையே போட்டிக்கு விடுவது என்று சமரசப் பேச்சுகள் நடாத்தியிருந்தால் இந்த ஒற்றுமை ஒருவேளை சரிவந்திருக்கலாம். திரு. சுந்தரலிங்கம் அவர்கள்தான் இந்த இரண்டு மூன்று இடங்களுக்கு ஒரே போட்டியிடுவது என்ற ஆலோசனையை முன்னெரு தேர்தலிலே கொண்டுவந்தார். இப்பொழுதும் மன்னாருக்கும் வவுனியாவுக்கும் இவரே போட்டியிட எண்ணியிருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன. எனவே தமிழ்மக்கள் சார்பாகத் திரு, சுந்தரலிங்கம் அவர்களையே தமிழ்பேசும் மக்களின் எல்லாத் தொகுதிகளுக்கும் போட்டியிடும்படி தெரிந்துவிட்டால் இந்தத் தலைவர்களின் தலைமைப் போராட்டம ஒழிந்துவிடுமல்லவா?

## உலகின் எப்பகுதியையும் தாக்கும் குண்டு

உலகின் எப்பகுதியையும் உருஷியாவிலிருந்தே தாக்கக்கூடிய அணுக் குண்டு சலவாயுக் குண்டுகளை உருசியா வைத்திருப்பதாக உருசிய அதிகாரிகள் கூறுகின்றனர்.

—

## இந்தியாமீது பாக்கிஸ்தான் விமானம்

—

இந்திய உலகசபையிலே, பாகிஸ்தானிய ஆகாய விமானங்கள் எல்லைகடந்து வந்து இந்தியப் பகுதியில் பறந்தமைபற்றிக் கேள்வி கேட்கப்பட்டது. பண்டித நேரு அவர்கள் பதிலளிக்கும்போது சென்ற சில ஆண்டுகளுக்குள் பாக்கிஸ்தான் ஆகாய விமானங்கள் எல்லை கடந்து பறந்தமை உண்மையே என்றும், அவற்றுட் சில தற்செயலாகவே வந்திருக்கலா மென்றும் அவ்வாறு எல்லை கடந்து பறப்பது பற்றி பாக்கிஸ்தான் அரசாங்கம் அறிவிக்கப் பட்டுவருகின்றது என்றும் வருங் காலத்திலும் இவ்வாறு எல்லை கடந்து பாக்கிஸ்தானிய விமானங்கள் பறக்குமேயானல் அப்படிப் பறப்பது வேண்டும் என்று செய்யும் செயலாகவேயன்றித் தற்செயலாய் நடந்தவையாகக் கருதப்பட மாட்டாதென்றும் பாக்கிஸ்தான் அரசாங்கத்துக்கு இந்திய அரசாங்கம் சுட்டிக்காட்டியிருப்பதாகக் கூறினர்.

## வரட்சி நட்ட நிவாரணம்

— —

அநுராதபுரம், வதுளை, மன்னார், வவுனியா, திருக்கோணமலை முதலிய இடங்களில் மழையின்மையால் வரட்சி யுண்டாகிக் கமக்காரருக்கு நேர்ந்த நட்டத்துக்கு நிவாரணம் செய்தற்கு அரசாங்கம் தீர்மானித்திருக்கின்றதாம்.

## கோவா பற்றி பாக்கிஸ்தான் தூதுவர்

இந்தியாவில் பாக்கிஸ்தான் தூதுவராயிருக்கும் ஸ்ரீ கஜ்னுபர் அலிகான் அவர்கள அலகபாத் பல்கலைக் கழக மாணவர் சங்கக்கூட்டத்தில் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு மறுமொழி கூறும்போது விரைவிலோ அல்லது சிறிது காலங் கழித்தோ கோவா இந்தியாவுடன் இணைந்தே தீருமென்று சொன்னராம்.

## எதிர்க் கட்சி ஐக்கிய முன்னணி

நான்கு எதிர்க் கட்சியினர் ஒன்றுகூடி ஐக்கிய தேசியக் கட்சியை எதிர்க்கும் நோக்கத்துடன் ஸ்ரீ எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகவைத் தலைவராகக்கொண்ட ஒரு ஐக்கிய முன்னணியை அமைத்திருக்கிறார்களாம்.

—

## ஆங்கிலம் அரசாங்க மொழியாகுமாறு வேண்டுகோள்

ஆங்கிலத்தை அரசகரும மொழிகளுள் ஒன்றாக்கும்படி கேட்கும் பிரேரணை ஒன்றுக்கு ஸ்ரீ ஜே. எஸ். நிக்கலஸ் யாழ்ப்பாண நகர சபையில் அறிவித்தல் கொடுத்திருக்கின்றாராம்,

## பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை

பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்கள் இவ்வுலகவாழ்வை நீத்துவிட்டார். தமிழ் மொழிக்குப் பெருந்தொண்டாற்றிய அவருடைய பிரிவுபற்றித் தமிழ்நாடெங்கும் துக்கங் கொண்டாடப்படுகின்றது.

# மகாமகம்பற்றி விளக்கம்

மகாமகம் என்பது பெருமை வாய்ந்த — சிறந்த மகம் முதலாகப் பல பொருள் கூறப்பெறும், மகாமகம் — வடசொற்றொடர்.

மகம், உடுக்கள் (நட்சத்திரங்கள்) இருபத்தேழில் ஒன்று. அது திங்கள்தோறும் வந்துகொண்டிருப்பது தான். ஆயினும் இங்கே கூறப்பெற்ற மகத்தைப் பற்றிச் சிறப்பாக அறிந்து கொள்ளல் வேண்டும்.

சோதிட நூல் வல்லுநராகிய முன்னோர் உலகங்கள் நன்மை அடையக்கூடிய காலத்தினைப் பலவாறு விளக்கிக் கூறியுள்ளனர். ஆகவே காலத்தினையும் அக் காலத்தில் செய்யப் பெறவேண்டிய நற் செயலையும் மக்கள் உணர்ந்து நற்செயலை எங்கெங்கே எவ்வெப்போது எம்முறையிற் செய்யவேண்டும என்பதையும் உணர்ந்து ஒழுகுவாராயின் யாக்கை பெற்றதனல் பெறவேண்டிய பயனைப் பெற்றராவர்.

"ஞாலம் கருதினும் கை
கூடும் காலம்
கருதி இடத்தாற் செயின்"

என்னும் இத் திருக்குறள் காலம் இடம் இவற்றின் சிறப்பியல்பைத் தெளிவாக அறிவுறுத்துகிறது.

இனி மகாமகம் என்பது மிகச்சிறந்த ஒரு புண்ணிய காலம். இதன் இலக்கணத்தை குரு சிம்ம ராசியிலே அதிசாரமாகவாகிலும் அவக்ரமாகவாகிலும் தொடர்ந்து வந்தால் மாமகம் என்னும புண்ணிய காலம் உண்டாகும். சந்திரனேடு குருவும் ஓர் இராசியிற் சேர்ந்தால அன்று உண்டாகும் உவா (பௌர்ணமி) மிக்க விசேடமுள்ளதாகும். இன்னும் கும்பராசியிலே சூரியனும் சிங்க ராசியிலே குருவும் உற்றால் மகா மக புண்ணிய காலமா' மென்று சாத்திரம் அறிந்தோர் கூறுவர். பன்னிரண்டு வருடங்களுக்கு ஒருதரம் பிரகஸ்பதி சிங்கராசியிலே வரும்போது, மாசி மாத மாமகம் ஆகும் என்று திருக்குடந்தைப் புராணம் கூறுகிறது.

(தமிழ்நாடு 21-2-56 இதழில் திரு. பி. ஸ்ரீநிவாசய்யர் எழுதியதின் ஒரு பகுதி.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்,

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்


# இந்துசாதனம்

யாழ். மன்மத ஞு மாசிமீ
௧௨ உ வெள்ளிக்கிழமை


## வாக்குப் பெறு வழி

சிங்களம் பேசும் மக்கள் சிங்களமே வேண்டுமென்று தேடுகின்றார்கள் வாக்காளர்களின் ஆதரவை. தமிழ் பேசும் மக்கள் தமிழும் சிங்களமும் அரச வரிசை சமமாகப் பெறுதல் வேண்டும் என்று மக்களின் வாக்குகளை வேண்டுகிறார்கள். இந்த மொழி உணர்ச்சி உண்மையாக இருக்கிற தென்றால் இப்பொழுது நடைபெற வேண்டிய தேர்தலிலே இரண்டு கட்சிகளே போட்டியிடுவார்கள். ஆனால் அவ்வாறின்றி இரு பக்கங்களிலும் பலவேறு கட்சிகள் தோற்றியிருக்கின்றன. அவ்வளவோடமையவில்லை. முன் நடந்த தெரிவுகளிற் போல் தலைமை நிலைமைக்கும் ஆதிக்கப் பதவிக்கும் இந்தத் தேர்தல் பயன்படுத்தப்படுகின்றது. எனவே மக்களின் உண்மை உணர்ச்சி, பரோபகாரம், தேசாபிமானம், மொழிப்பற்று ஆதியனவெல்லாம் கட்சி நோக்கங்களாலும் தலைவர்களுக்கு நிலைமை தேடும் அவாவினாலும் பாதிக்கப்படும் ஒரு நிலை ஏற்பட்டிருக்கின்றது. இவற்றைக்கப்பால், மக்கள் அறிவாற்றலினால் அநுபவப் பெருக்கத்தினால் செறுவிடுவார்களா என்றால், அவ்வாறு முன்னேற வழி காணப்படவில்லை.

போற்றுவதும் தூற்றுவதுமே பொதுத் தேர்தலின் பொழிப்பாக இருத்தல் வேண்டுமென்று பிரசாரக் கூட்டங்களும் அவற்றைக் குழப்பும் கூட்டங்களும் பெரிதும் மூண்டு வருகின்றன. மக்கள் ஆட்சியிலே ஒவ்வொரு வாக்காளரும் எவ்வகையிலே தெரிவில் நடந்து கொள்ளுதல் வேண்டும் என்ற அறிதல் அவசியம். அந்த அறிவையும் அநுபவத்தையும் பல தேர்தல்களின் பயனாக இப்பொழுது எல்லா வாக்காளர்களும் அடைந்திருப்பார்கள். 'எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு' என்ற தமிழகப் பண்பாட்டைக் காப்பாற்றுவதல்லவா தமிழினத்துக்கும் தமிழ் மொழிக்குமாக உரிமைப் போராட்டம் நிகழ்த்த முன்வந்திருப்பவர்களின் கடமையும் பொறுப்பும். அக்கடமையையும் பொறுப்பையும் அன்னார் செவ்வனே உணர்ந்திருப்பார்களேயானால் இதர மொழியாற் பேராபத்து நிகழவிருக்கும் வேளையிலே மெய்ப்பொருள் காண்பதற்கு மக்களுக்கு அமைதியான நிலைமையை யகற்றும் கொந்தளிப்பான சூழல் கொண்டுவரப்படுதலைக் கண்டு வாளாவிருப்பார்களா?

தமிழகத்தின் இன்றைய நிலையென்ன, தமிழகத்தின் எதிர்கால வாழ்க்கையென்ன? தாய்மொழியின் உரிமையைப் பாதுகாப்பதெவ்வாறு, தாய் நாட்டில் மக்கள் சமத்துவமாய் வாழ்வதெங்ஙன் என்பனவே வாக்காளர்கள் ஆய்ந்தறிந்து கொள்ளவேண்டியவை. அவற்றை அறிவதற்கும் அறிந்து தகுந்த முடிவு கொள்வதற்கும் அவர்களுக்கு உரிமையுண்டு. இந்த உரிமைகளுமே இல்லை என்றால் இந்நாட்டிலே தேர்தல் எதற்காக பாராளுமன்றத்திற்கு யார்தான் எதற்காகச் செல்லுதல் வேண்டும்.

எனவே, ஒழுக்க நெறியையும், உண்மை வழியையும் விட்டு இறுமாப்பினாலும் ஆணவ இருளினாலும் அறிவொளி காணமுடியாது தடுமாறுகின்றவர்களின் வாக்குரிமை நாடாதிருத்தல் நன்று.

சைவபரிபாலன சபையில்:

# திருவள்ளுவர் திருநாள்

## திருக்குறட் பெருமை திருவள்ளுவர் சமயம்

### ஆராய்ச்சிப் பேருரைகளில் அறியவந்த உண்மை

27-2-56 திங்கட்கிழமை இரவு யாழ்ப்பாணம் சைவ பரிபாலனசபை ஆதரவில் திருவள்ளுவர் திருநாள் கொண்டாடப்பட்டது, கடவுளாராதனை தமிழ்மறையோதல் நடந்தபின் சபைத் தலைவர் திரு. த. முத்துச்சாமிப்பிள்ளையவர்கள் தலைமையில் விரிவுரைக் கூட்டம் நடந்தது. தலைவர் தமது முன்னுரையில் திருவள்ளுவ நாயனார் குருபூசை தமிழ் மக்களால் கொண்டாடப்படவேண்டிய தவசியமெனவும் திருக்குறள் தமிழ்மொழிக்கு ஒரு அணிகலன் எனவும் திருக்குறள் பலமொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றமையே அந்நூலின் பெருமைக்குச் சான்றெனவும் கூறினார். அணை உயர்தர நீதிபதி திரு. என். சிவஞான சுந்தரம் அவர்கள் திருவள்ளுவர் என்னும் பொருள்பற்றி ஒரு அரிய சொற்பொழிவாற்றினார். திருவள்ளுவர் காலம் கிறிஸ்துவுக்குமுன் இரண்டு நூற்றாண்டாயிருக்கக்கூடும் எனவும் திருக்குறளில் அறம்பொருள் இன்பம் கூறப்பட்டிருப்பினும் வீடு அந்நூலில் மறைவாகக் கூறப்பட்டிருக்கின்றதெனவும், வடமொழியிலுள்ள அர்த்த சாத்திரக் கருத்துக்கள் திருவள்ளுவர் குறளில் அடங்கியிருக்கின்றன வெனவும் திருக்குறளைப் படிக்கின்றவர்கள் வடமொழி அர்த்த சாத்திரங்களையும், மக்கியவலி என்னும் மேல்நாட்டுப் பண்டிதர் செய்த 'The Prince' என்னும் நூலையும் குறிப்பிட்டுப் படித்தல் நன்மை பயக்குமெனவும் கூறினார். பின்பு பண்டிதர் வ. மூத்துக்குமாரு அவர்கள் வள்ளுவர் வாழ்க்கையென்னும் பொருள்பற்றி ஒரு சொற்பொழிவாற்றினார். திரு என்பது தெய்வத்தன்மை பொருந்தியதெனவும் 'வள்ளுவர்' என்பது அவருடைய பெயரைக் குறிக்கிறதெனவும் வள்ளுவர் வாழ்க்கை தெய்வத்தன்மை பொருந்தியதெனவுங் கூறினார். பேராசிரியர் திரு. மு. ஞானப்பிரகாசம் அவர்கள் திருவள்ளுவரும் வாலறிவனும் என்னும் பொருள் பற்றி ஒரு சொற்பொழிவாற்றினார். அவருடைய நூலைப் படிப்பவர்களுக்கு திருவள்ளுவர் கடவுட் கொள்கையுடையவரென்றும் எண்குணத்தான், மலர்மிசை யேகினான் முதலிய சொற்றொடர்களால் அவர் சைவ சமயத்தை அநுட்டித்தவரென்பதும் சார்புணர்ந்து சார்புகெட ஒழுகல் என்ற குறளினால் ஆன்மா வாலறிவனாகிய சிவனைச் சார்ந்தொழுகினால் பிறவி நோயை நீக்கமுடியுமென்றுங் கூறினார். நன்றி கூறுதலுடன் கூட்டம் நிறைவெய்தியது.

மல்லாகத்தில்

மல்லாகம் ஆங்கில வித்தியாசாலையில் கட்டப்பட்ட புதிய திருவள்ளுவர் கட்டிடத்தைத் திருவள்ளுவர் குருபூசைத் தினமான 26—2—56 திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அக்கல்லூரி உபஅதிபர் திரு. மு. சிற்றம்பலம் திறந்து வைத்தார். அதற்கு திருவள்ளுவர் மன்றம் எனப் பெயரிடப்பட்டது. பூரண கும்பம் வைத்து வள்ளுவர் பெருமானின் [illegible] குருபூசை செய்து மிகச் சிறப்பாகக் குருபூசை செய்யப்பட்டது. கல்லூரி அதிபர் திரு பொன்னையா அவர்கள் ஓர் சொற்பொழிவாற்றி அக்கல்லூரியின் சிரேஷ்ட மாணவ சங்கம் ஆண்டுதோறும் கொண்டாடும் திருவள்ளுவர் விழாவை அம்மன்றத்தில் தொடங்கிவைத்தார். விழாவுக்குத் தலைமை தாங்கிய மாணவன் செல்வன் பொ. சிவலிங்கம் திருக்குறள் பயிலுவதைப் பற்றிப் பேசினார். அவ்விழாவில் மாணவ மாணவிகள் மிகுந்த ஆர்வத்துடன் பங்கு பற்றினர். செல்வி மங்கஸ்வரி எஸ். இரத்தினசிங்கம், ஏ, இராமலிங்கம், சதாசிவ சர்மா ஆகியோர் திருவள்ளுவரைப் பற்றிச் சிறப்பாகப் பேசினார்கள். "மாணவரும் திருவள்ளுவரும்" என்ற பொருள்பற்றி பலாலி அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைத் தமிழ்ப் பேராசிரியர் திரு பி. கிருஷ்ணபிள்ளை அவர்கள் மிக இனிமையான ஓர் சொற்பொழிவாற்றினர். சிற்றுண்டியின் பின் ஓர் இன்னிசை விருந்தளிக்கப்பட்டது.

தொடர்ச்சி 5-ம் பக்கம்

## ஸ்ரீ தியாகராஜ மகோற்சவம்

மேற்படி மகோற்சவம் மாசி 19ந் திகதி (2-3-56) தொடக்கம் 21-ந் திகதி (4-3-56) வரை வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் நடைபெறுமென்று அறிய வருகின்றது.

## இந்திய பாராளுமன்றத் தலைவர் மறைவு

இந்திய சபைத் தலைவர் ஸ்ரீ ஜி. வி. மவ்லங்கர் அவர்கள் இவ்வுலக வாழ்வை நீத்துவிட்டார். உலக சபைத் தலைவராய்ப் பெரும் புகழ் ஈட்டிய இவர் இந்திய தேசிய மகாநாட்டு உறுப்பினராயிருந்து காரியதரிசிப் பதவி வகித்தும் பிறவாற்றாலும் சிறந்த தொண்டாற்றிய தீரர் என்று பாராட்டப்படுகின்றார்.

## மேற்கு நாடுகளுக்குப் போர்த்தூக்கல் செய்யும் தீமை

பிரித்தானிய பாராளுமன்றத்தில் வெளிநாட்டு விவாதத்தின்போது தொழிற்கட்சி அங்கத்தவர் ஸ்ரீ கென்னெத் யங்கர் எதிர்க்கட்சிக் கருத்தை வெளியிட்டார். அவர் பேசும்போது கோவாவில் போர்த்துக்கல் கையாளும் கொள்கையால் ஆசியாவில் மேற்கு நாடுகளின் நலனுக்குப் போர்த்துக்கல் தீமை செய்கின்றது என்று கூறினர்.

# வாழ்க்கை வானில்

— வளர்மதி

மாநகர சங்கத்தில் 'விடாத பேச்சு'

கொழும்பு மாநகர சங்கத் தலைவரை நீக்க வலது சாரிகள் கொணர்ந்த பிரேரணைமீது 'விடாத பேச்சு' வீச்சாய் நடந்தது இரவும் பகலும். இந்த மாதன் பேச்சு நிகழ்ந்து மறுநாளுந் தொடர்ந்தது. ஆனால் அக்கூட்டத்திற்குத் தலைமைவகித்த மாநகரசங்க ஆணையாளர் ஒருவாறு தடையை உபயோகித்து விவாதத்தை நிற்பாட்டினர். இரண்டு வாக்குகள் மேலதிகமாகப் பிரேரணைக்குச் சார்பாக இருந்தமையால் இடதுதலைவர் விலகி இடங்கொடாது மறுக்க முடியாது இடங்கொடுக்க வேண்டி நிகழ்ந்தது.

அடுத்த தலைவரைத் தேர்ந்தெடுத்தல்

விலக்கும் வேலை முடிந்து ஒருநாழிகை வேளை முடியுமுன தலைவரைத் தேர்ந்தெடுக்கும் வேலை ஆரம்பித்து விட்டது. இடது வலது என்ற இரு பிரிவுகளும் விடாது முயல்கின்றனர். வலது கட்சியில் யாராவது மாறி வலது குறையச் செய்வார்களா என்பதே தஞ்சம் என இடதுகட்சி எண்ணுகிறது. வலது கட்சியில் யார் தலைவன் என்று அவர்களும் கவைப்படுகின்றனர்.

வதந்தியும் வாக்காளர்களும்

தேர்தற்காலம் என்றாற் சொல்லவும் வேண்டுமா? வீதிப்போராட்டத்துக்கு அளவிருக்குமா? அவர் வரவில்லை! இவர் புறப்பட்டிருக்கிறார்; அவரும் இவரும் ஒன்றாய்விட்டார்கள் என்று காலையில் ஒன்று, நடுப்பகலில் இன்னொன்று, மாலையிற் மற்றொன்று. திருவாளர் வாக்காளர் எல்லாச் செய்திகளையும் இரு செவிகளாலும் கேட்டுச் சும்மாவிருந்தால் ஒருவாறு தப்பிவிடலாம். இல்லையேல் பந்துபோல் உருண்டு குரங்கு போலக் கொப்புதாவும் நிலையிலே தேர்தற் கட்சிகளாலும் அபேட்சகர்களாலும் வருத்தப்படுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றுள்ள கவலைக்குக் காரணம்

## கல்வி முறைகள் பண்டும் இன்றும்

### ஆசிரியர் பெற்ருேர் செய்யவேண்டியவை என்ன?

மாணவர் கல்வி கற்றுக் கற்றதன்படி நடந்து தமக்கும் பிறர்க்கும் பயன்படத் தக்கதாக வாழ்ந்து மெய்ப் பொருளையறிந்து பேரின்ப வாழ்வடைவதற்கே ஆதிகாலத்தில் பாடசாலைகளை உண்டாக்கினர்கள்.

நாவலர் காலத்திலும் அதற்கு முற்பட்ட காலங்களிலும் இன்று இருப்பதைப்போலப் பாடசாலைகளும், கல்லூரிகளும் இல்லை, ஆங்காங்கு திண்ணைப்பள்ளிக்கூடங்களே இருந்தன. அத் திண்ணைப் பள்ளிக்கூடங்களிருந்த இடங்களிற் சில இன்றும் அடிமற்றுப் போகாவண்ணம் யாழ்ப்பாணப் பகுதிகளிற் காட்சியளிக்கின்றன. திண்ணைப்பள்ளிக்கூடங்களிற் கற்றவர்கள் வாலறிவு கைவரப் பெற்று அறிவாளிகளாயும் சிறிய பண்பாடுகளுடையோர்களாயும் மிளிர்ந்தனர். ஆனல் இன்று பாடசாலைகளிற் கற்கும் மாணவர்கட்கு உண்மையறிவும் சீரிய பண்பாடுகளும் இல்லை அவற்றுக்குப் பதிலாக போலியறிவும் அநாகரீகங்களும் பண்பற்ற தன்மைகளும் கொள்கைகளுமே அவர்களைப் பற்றிப் பிடித்திருக்கின்றன, அன்று பாடசாலைகளில் முக்கிய பாடமாகச் சமயம் கற்பிக்கப்பட்டது. இன்று சமயத்தைப் புறக்கணித்து அதை முக்கிய பாடமாகக் கருதுகின்ருர்களில்லை. சமயக் கல்வியின்றேல் வேறு எக்கல்விதானும் மாணவர்கட்கு நன்மை தரமாட்டாதென்பது உறுதி. இன்றுள்ள பாடசாலைகள் பிள்ளைகட்கு இடாம்பீக வாழ்வை வாழக் கற்றுக்கொடுக்கின்றனவேயன்றி உண்மை வாழ்வை சீரிய முன்னேற்றத்தைக் கற்றுக்கொடுக்கிறதாகக் காணப்படுகின்றில.

பெரும்பான்மையும் பாடசாலையாசிரியர்களிடையே இன்று குருத்துவத்தன்மை இல்லை. குருத்துவத்தன்மை ஆசிரியர்களிடையே இல்லாவிடத்து மாணவர்கட்கு உண்மைக் கல்வியைப் புகட்ட இயலாது.

"குலனருள் தெய்வம் கொள்கை மேன்மை
கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை
நிலம்மலை நிறைகோல்
மலர் நிகர் மாட்சியும்
உலகியலறிவோ
டுயர் குண மினையவும்
அமைபவ நூலுரை
யாசிரியன்னே"

என்று நூல் கற்பிக்கும் ஆசிரியரின் இலக்கணத்தைப் பவணந்தியார் தெளிவாக எடுத்தோதியிருக்கின்ருர். இன்று அவர்கூறிய இத்தனை இலக்கணங்களுமமைந்த ஆசிரியர்களைப் பாடசாலைகளில் காண்பது அரிதினுமரிது. இன்று

.... .... .... .... .... .... .... ....

செல்வி த. மாலோகமணி
காவெட்டி கிழக்கு

.... .... .... .... .... .... .... ....

மாணவர்கள் மேன்மைக்காகவும், நாகரீகமென்றெண்ணியும் பொழுதுபோக்கிற்காகவும், உத்தியோகத்திற்காகவுமே பாடசாலைகளிற்குப் போகின்றனரேயன்றி உண்மைக் கல்வியைக் கற்று அதன் வழி நடந்து ஈடேறுதற்காகவல்ல. கல்வியின் நோக்கமென்ன என்பதை உண்மையாக உணர்வார்களாயின் ஆசிரிய உலகமும் மாணவ உலகமும் அழிவுப் பாதையை நோக்கி விரைந்துசெல்ல முயலுமா? முற்காலங்களில் உத்தம இலட்சணங்களற்ற மாணவர்கட்கு ஒருபோதும் ஆசிரியர்கள் பாடஞ்சொல்லிக் கொடுக்கமாட்டார்கள் இன்று எல்லாம் போலியமானபடியால் பள்ளிக்கூடங்கள் களியாட்ட மேடைகளாகக் காட்சியழிக்கின்றன. இன்றுள்ள மாணவர்களிடையே நாஸ்திகம் உரத்த நிலை வகிக்கும்பொழுது பள்ளிக்கூடங்கள் உண்மையைக் கற்பிக்கும் இறைநிலையங்களாக மிளிர்வது எங்ஙனஞ்சாலும்?

முற்காலத்தில் ஆசிரிய மாணவர் குரு சிஷ்யரென்ற முறையிலும் இருபகுதியினரும் சீரியபண்பாடுடையவர்களாகவும் நல்ல நோக்கத்தோடுமே பாடசாலைகட்குச் சென்றனர். அதனுல் அவர்கள் நல்ல மாசற்ற அறிவுள்ளோர்களாகவும் நற்பண்பாடுகள் கொண்டோர்களாகவும் என்றும் நின்று நிலவும் புகழுக்குரியராய்ச் சமூக மற்ற தொண்டாற்றி விளங்கினர். இவைகளை இன்றுள்ள ஆசிரியர்கள் உணர்வார்களாயின் தாம் நிற்க வேண்டிய வழியில் தாமாகவே நிற்பர். இவை ஆசிரியர் மாணவர்களைப்பற்றியவை பிள்ளைகளைப் பாடசாலைக்கனுப்பும்பெற்ருேர்களின் நோக்கம் சரியானதா? இல்லை. பொழுதுபோக்கு, உத்தியோகம், விவாகம் என்பவையே அவர்களின்நோக்கம். பெற்ருேர்களின் நோக்கத்தையறிந்து அதற்கேற்கப் பிள்ளைகள் காதல் நாடகங்கள் நடிக்கத் தொடங்கிப் பாடசாலைகளைக் காதல் மேடைகளாக்குகின்றனர். எவர்களாயினும் உண்மை நிலை தவறி நடக்கும்பொழுது, நடக்க எத்தனிக்கும்பொழுது அழிவுப்பாதையை விரைந்துசெலகின்ருரென்றுநினைக்க வேண்டும். இன்று ஆசிரியர், மாணவர், பெற்ருேர் மூத்திறத்தோரும் உண்மை நிலை தவறி நடக்கின்ருர்களானபடியாற்ருன் இன்றைய உலகநிலை கவலைக்கிடமாகின்றது. எல்லோரும் உண்மையைக் கடைப்பிடித்து உண்மை நிலையில் நின்ருல் ஒருபோதும் அழிவு வராது அரசியலரங்கிலும் சிறுபான்மையினர் ஒதுக்கப்படமாட்டார்கள். பாஷையும் ஒதுக்கப்படமுடியாது. தமிழர்கள் எல்லோரும் உண்மை நிலை தவறி உருக்குலைந்தபடியாற்ருன் இன்று தமிழர் நிலை அவலமாக இருக்கின்றது. தமிழர்களெல்லோரும் ஒருங்கு சேர்ந்து உண்மையின்படி நடப்பார்களாயின் வெற்றியீட்டுவது திண்ணம். "உண்மையொன்றே வெற்றிக்கு வழி".

# அணிந்துரை அரங்கம்

**திருக்குறள் கட்டுரைகள்**

இருபதுகட்டுரைகள் அடங்கிய இது கொழும்பு திருக்குறள் மன்றத்தாரால் சென்னை ஸ்ரீமகள் அச்சகத்தில் அச்சிடுவித்து திருவள்ளுவர் நினைவு மலராக வெளியிடப்பெற்றது.

பிரதி விலை ரூபா 2-0-0

கிடைக்குமிடம் ஸ்ரீமகள் கம்பெனி, சென்னை-கோவை-மதுரை-திருநெல்வேலி

"திருக்குறள் அறத்தினை உணரத் தலைப்படுவார்க்கு ஒரு பேரற நூல்; அரசியலை அறிய விரும்புவோர்க்கு ஓர் அரசியல் நூல் ஞானத்தை விரும்புவார்க்கு ஒரு ஞான நூல்' எனவும் பிற பலவாறும் புகழ்தற்குரிய தமிழ்மறையின சிறப்புக்களைத் தமிழ் மக்கள் அறிதற்கும் அறிந்து வாழ்தற்கும் சிறந்த ஓர் வழி காட்டியாக இவ்வெளியீடு விளங்குகின்றது. பண்டைப் பெருமை வாய்ந்த தமிழ் மக்கள் சிறுமையுற்று நிற்கும் இக்காலத்தில் இவ்வெளியீடு பெரும் நன்மை பயப்பதொன்ருகுமென்பது சொல்லாமலே அமையும்.

(முதலாம் கட்டுரையில் "அதிகாரத்துக்கு உள்ளாக வேண்டியதிருந்தது............ ஓர்ப்படி ராகங்கியைக் கண்டால் என்பனவும் அவை போன்றனவும் பிறவாறமைதல் நன்று.)

**திருக்குறள் ஆராய்ச்சி**

பதினொன்கு ஆராய்ச்சிக் கட்டுரைகள் அடங்கிய இது கொழும்பு திருக்குறள்மன்றத்தாரால் சென்னை ஸ்ரீ மகள் அச்சகத்தில் அச்சிடுவித்து திருவள்ளுவர் நினைவுமலராக வெளியிடப்பெற்றது.

பிரதி விலை ரூபா 2-0-0 கிடைக்குமிடம்: ஸ்ரீ மகள் கம்பெனி, சென்னை-கோவை-மதுரை-திருநெல்வேலி

திருவள்ளுவரின் சமயம், திருக்குறள் விளக்கும் பொருள்கள் ஆதியவற்றில் கருத்து வேறுபாடுகள் மிகப் பலவுள. அவைபற்றி ஆராயும் இக்கட்டுரைகள் திருக்குறளைக் கருத்தூன்றிக் கற்கச் செய்து உள்ளதை உள்ளவாறறிய முயல்தற்கு ஊக்கமளிப்பனவாகும்.

அவ்வழி உதவும்பொழுது "ஒதுசமயங்கள் பொருளுணரு நூல்கள் ........ யாதொரு சமயம் அது சமயம் பொருணூல்" என்னும் சிவஞான சித்திச் செய்யுளை எடுத்துக்காட்டி "இங்கு கூறப்படும் நூல்கள் மறைகளும் ஆகமங்களும் ஆகும். ஆனல் இந்தப் பாட்டில் உள்ளபடி நீதியினல் உலகத்தில் எல்லோர்க்கும் ஒத்த ஒரு பொது சமயம் காட்டிநிற்பது திருக்குறளேயாம்". (பக் 105) என்று வேதசிவாகமங்களுக்கும் சிவஞானசித்தியாருக்கும் சிறுமைதொனிக்கச் செப்புதல் விரும்பத் தக்கதன்று.

கருத்துக் கிளர்ச்சியைச் செய்யும் இவ்வாராய்ச்சிக் கட்டுரைகள் தமிழ் மக்களுக்குப்பலவாறு பேருதவி புரிவனதாகும். இவ்வெளியீடுகளை ஆதரித்துப் பயனடைதல் தமிழ்மக்கள் கடன்.

**பிராசாதசட் சுலோகித் தமிழுரை**

உரை ஆசிரியர்
ஸ்ரீலஸ்ரீ சிவசங்கர பண்டிதர்

நீர்வேலி. ஸ்ரீலஸ்ரீ சிவசங்கரபண்டிதர் ஞாபகார்த்த சபையினரால் தங்கள் இரண்டாம் வெளியீடாய் அச்சுவேலி சிவ ஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள் அவர்கள் எழுதிய குறிப்புகளுடன் அச்சிடுவித்து வெளியிடப்பெற்றது.

பிரதி விலை சதம் 25. பெறுமிடம் மேற்படிசபை நீர்வேலி.

இது திருவைந்தெழுத்தின் பீசமாயுள்ள ஹௌம் என்பதன் பன்னிருகலைப் பிராசாதத்தை ஆறுசுலோகங்களால் விளக்குவது, சிவஞானப் பேறுகிய முத்தியை இதுதாவல்லது, என்று புகழப்பெறுவதும் இதற்குத் தமிழுரை தந்தவர் வடமொழி தென்மொழிப்

தொடர்ச்சி 4-ம் பக்கம்

# இன்றுள்ள தீமைக்குஎது

நிலையான சமாதானம் உண்டாக்கலாமென்பதை ஒருவர் நம்பாமலிருப்பதனுல் அவர் மக்கள் இயல்பில் கடவுட்டன்மை உள்ளது என்பதை நம்பாதவராவர். முன்பு தாம் செய்த முயற்சிகள் பயனற்றுப் போயின என்ருல் செய்த முயற்சியில் உறுதி அடிப்படையான நம்பிக்கை இல்லாமையே காரணமாகும். இக்குறையை அவர் உணர்கிலர். அரைகுறை முயற்சியால் நிலையான சமாதானம் பெறமுடியாது.

அழிப்புக் கருவிகளை ஆட்சியில வைத்திருக்கும் மதிப்பிற்குரிய மனிதகுலத் தலைவர்கள் இவ்வழிப்புக் கருவிகளால் விளையக்கூடிய ஆபத்தை நினைத்து அவற்றின் பிரயோகத்தை முழுதும் நிறுத்துவார்களானல நிலையான சமாதானம் நன்கு பெறலாம். இராசாதிகார எண்ணங்களை உலக வல்லரசுகளின் மனத்திலிருந்து நீங்காவிட்டால் உலக சமாதானம் என்பது எவ்வாற்றானும் உண்டாக்க முடியாது. தேவைகளைப் பெருக்கித் தேவைக்குத் தக்கபடி பொருள்களைப் பெருக்குவதையும் உயிர் அழிப்புப் போட்டியையும் உலக வல்லரசுகள் நிறுத்தா விட்டால் சமாதானம் வரமாட்டாது. கடவுள் ஒருவர் உளர் என்ற நிலையான நம்பிக்கை இன்மையே இன்றுள்ள தீமைக்கு மூலகாரணம் என்று நான் திடமாக நம்புகிறேன்

—மகாத்மா காந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அணிந்துரை அரங்கம்

3-ம் பக்கத் தொடர்ச்சி

பாண்டித்தியத்தில் பெரும் புகழ் படைத்த சிவசங்கர பண்டிதர் அவர்கள் என்பதும் இதற்குக் குறிப்புரை எழுதியவர் அச்சுவேலி சிவ ஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள் அவர்கள் என்பதும் இதன் பெருமையை நன்கு புலப்படுத்துவனவாகும்.

பிராசாத சட்சு லோகி

(கிரந்த மூலமும் தமிழ் உரையும்)

இது யாழ்ப்பாணம் அரியாலை மேற்கு சிவஸ்ரீ இ. ஞானசேகரக் குருக்கள் அவர்களால் அச்சிடுவித்து வெளியிடப்பெற்றது.

பிரதி விலை சதம் 50. பெறுமிடம் சிவஸ்ரீ இ. ஞானசேகரக் குருக்கள் 134, கண்டிவீதி புங்கன் குளம், யாழ்ப்பாணம்.

திருவைந்தெழுத்தின் பீசமாயுள்ள ஹௌம் என்பதன் பன்னிரு கலைப் பிராசாதத்தை ஆறு செய்யுள்களால் ஆசிரியர் விளக்குகின்றார். அதை விளங்கிச் செபம் செய்து பெரும்பயன் பெறுதற்கு இது உதவுமென்று ஸ்ரீமத் ஈசான சிவாச்சாரியர் பண்டிதர் மவே திருஞானசம்பந்தப் பிள்ளை ஆகியோர் இந்நூலுக்கு எழுதிய தங்கள் மதிப்புரைகளில் அறியத்தருதல் இங்கே குறிப்பிடத் தக்கது.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் அருளிச்செய்த
தேவாரப் பதிகங்கள்

(குறிப்புரை படங்களுடன்)
மூன்றுவது திருமுறை
பிரதி ஒன்று விலை ரூபா 5-12-0

இது தருமபுர ஆதீனத்தாரால் தருமபுர ஆதீன முதற்குரவர் ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்ததேசிகபரமாசாரியசுவாமிகள் குருபூசை விழா மலராயமைய ஆதீனத்தின் 348ம் வெளியீடாய், தருமபுரம் தேவாரப் பாடசாலை ஆசிரியர் பண்டிதர் திரு. அ. கந்தசாமிப் பிள்ளை அவர்களின் குறிப்புரைகளுடனும் திருவண்ணாமலையாதீனம் குன்றக்குடி மகாசந்நிதானம் அவர்களின் பாராட்டுரையுடனும் திருநள்ளாறு தேவஸ்தானம் வித்துவான் ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் தருமபுரம் ஞானசம்பந்தம் அச்சகத்தில் அச்சிடுவித்து வெளியிடப்பெற்றது.

தருமை ஆதீனம் செய்து

வரும் சிறந்தசைவத் திருத்தொண்டுகள் பலப் பல. அவற்றுள் ஒன்ருகிய இது சைவ உலகின் பெரும் பாராட்டுக்குரியது என்பது சொல்லாமலே அமையும்.

# தமிழ் மக்களின் வீர வாழ்க்கை

## பண்டைப்பெருமையும் இன்றுள்ள நிலைமையும்

## பாரதியாரின் பொன்மொழி

செந்தமிழ் நாட்டை "வீரம்செறிந்த தமிழ்நாடு" எனப் பாடினர் பாரதியார். தம் நாட்டைக் காப்பாற்றவும் தம்மை இகழும் அரசரைத் தண்டித்து அவர்களின் வலிமையடக்கவும் படைகளை வைத்திருந்தனர் தமிழ் மன்னர். அப்படைஞர் தற்காலத்துக் கூலிப் படைஞர் போலல்லாது நாட்டிற்குச் சேவை புரிய ஆவல் உள்ளவர்களாகவும் திடம்பொருந்திய வீரர்களாகவும் இருந்தார்கள். "புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே" என்று கூறும் சிவனடியாரைப்போன்று, யுத்தத்தில் விழுப்புண்படாத நாட்களெல்லாம் பிறவா நாள் என்று கூறும் சிறந்த வீரமுடையவர்கள். ஒரு சிறந்த வீரனை நமக்குமுன்னே கொண்டு வருகிருர் வள்ளுவர். ஒருவீரனுடைய தேகத்திலே எதிரி எறிந்த வேல் பாய்ந்துவிடுகிறது. அதே சமயம் எதிரே யானை ஒன்று வருகிறது. தனது கையிலே உள்ள வேலை யானைக்கு

ஸ்ரீ வ. குகசர்மா

மேலே எறிந்து அதைக் கொன்றுவிடுகிருன். மேலும் பகைவர்கள் வருகிருர்கள். அவர்களோடு யுத்தம் செய்யக் கையில் வேல இல்லை. வேலைத் தேடுகிருன். அவனுடைய தேகத்தில் பாய்ந்திருக்கும் வேல அவன் கவனத்தைக் கவருகிறது. அதைத் தேகத்திலிருந்து பிடுங்குகிருன். வேல் கிடைத்த மகிழ்ச்சியில் தேகத்தில ஏற்பட்ட வருத்தத்தையும் மறந்து நகைக்கிருன். என்ன வீரம்? இக் கருத்தை,

"கைவேல் களிற்றெடு
போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்"

என்ற குறள் கூறுகிறது. யுத்த களத்தில் காட்டுவது தான் வீரம் எனப் பழய தமிழர் கொள்ளவில்லை வேறு துறைகளிலும் அவர்களுடைய வீரம் செறிந்து விளங்கியது. அவைதான் தமிழரின் புகழை உயர்த்தின எனக்கூறலாம். திலீபன் என்பவன் ஒரு சோழ மன்னன். வசிட்ட முனிவருடைய பசுக் கன்றிற்குக் காவலாய் நிற்கும்பொழுது ஒருசிங்கம் அப் பசுக் கன்றை உண்ணும்படி வந்தது. திலீபன் பசுக் கன்றைக் காப்பாற்றத் தனது இரத்தத்தைக் கொடுத்தான் என இரகுவம்சம் கூறும். "வலியினிற் குருதி உண்கென அளித்தவனும்" என்ற கலிங்கத்துப் பரணி அடிகளில் அவன் எடுத்துப் பேசப்பெறுகிருன்.

சிபிச்சக்கரவர்த்தி நீதி தவருத மன்னன். ஒருமுறை ஒரு வேடன் உணவிற்காக உயிர்ப்புரு ஒன்றைக் கொல்ல முயல்வதைக் கண்டான். அதை விட்டுவிடும்படி அவனிடம் கேட்டான். வேடன் தனக்கு உண்ண மாமிசம் வேண்டுமென்று கேட்டான். புருவை ஒரு தட்டில் வைத்து மறுதட்டில் தன் தேகத்தில் உள்ள மாமிசத்தை அரிந்து வைத்தான். அது போதாமற் போகவே தானே துலைத் தட்டில் ஏறி உயிரைக்கொடுக்கத் துணிந்தான். இந்த வீரச் செயல்

"உடல் கலக்கறவ ரிந்து
தசையிட்டு மொருவன்
ஒருதுலைப்புறவொ டொக்க
நிறை புக்க புகழும்"

என்று கலிங்கத்துப்பரணியில் புகழப்படுகிறது.

தன்னகம் புக்க குறு
நடைப் புறவின்
தபுதியஞ்சிச் சீரைபுக்க
வரையா வீகை
புரவோன் மருக"

எனப் புறநானூறும் இச் செயலை வீரச் செயலாக விதந்து பேசும்.

இவைபோன்ற பலவீரச் செயல்களைத் தமிழ்நூல்களிற் பரக்கக் காணலாம். இவ்வாருன செய்கைகளைக் கொண்டே "வீரம் செறிந்த தமிழ்நாடு" எனப் பாரதியார் விளித்தார். ஆனல் இக்காலத்தில் தமிழர் புகழ் இறங்கிக் கொண்டு போகின்றதென்பதை அவர் உணர்ந்தார்.

"பாமரராய் விலங்குகளாய்
உலகனைத்தும்
இகழ்ச்சி சொலப்
பான்மை கெட்டு
நாமமது தமிழரெனக்
கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ
சொல்லீர்"

எனத் தமிழரைப்பார்த்துக் கேட்கிருர். இந்தியா அடிமை நாடாய் இருந்தகாலத்திலே அவருக்கு இவ்வாறு சொல்ல எவ்வளவு நெஞ்சில் வலிமை வேண்டும்? தமிழரைத் தட்டியெழுப்பியதற்காக எவ்வளவு துன்பமடைந்தார்? ஆனல் அஞ்சினரா? சுவாமி விவேகானந்தர் இந்து சமய மகிமையை உலகறியச் செய்தார். பிறந்த நாட்டிலே இருந்து பல்லாயிரம் மைல்களுக்கு அப்பாலே பல சமயத்தவரும் கூடியிருந்த அவையிலே தம் சமய நிலையை அந்நிய பாஷையிலே எடுத்துக்கூற அவருக்கு எவ்வளவு வீரம் வேண்டும். உண்மையை அஞ்சாமல் சபையில் எடுத்துக்கூற நேர்மைவேண்டும். பழையநிலை திரும்பி வர நாம் என்ன செய்யவேண்டும்? வரகவி கூறுவதைக் கேட்போம். "ஒரு சொற் கேளீர் சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம் தமிழ்முழக்கம் செழிக்கச் செய்வீர்" என்று கூறுகிருர். அவ்வாறு செய்வதற்கு நம்மில் ஒற்றுமை வேண்டும். நெஞ்சில் உரம் வேண்டும். நேர்மைத்திறன் வேண்டும்.

## இந்திய—பாக் எல்லை குழப்பம்

இந்திய—பாக்கிஸ்தான் எல்லையைக் கடந்து இந்திய பகுதிக்குள் பாக்கிஸ்தான் படையினர் சென்றபடியால் குழப்பமொன்று உண்டாயிற்றும். இதுபற்றி இந்திய உலோக சபையில் கேள்விகள் கேட்கப்பட்ட பொழுது பாக்கிஸ்தான் படையினரின் செயல் பெரும் பிழையானதென்றும், தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் பண்டிதநேரு மறுமொழி கூறினராம்.

# சிவராத்திரி விரதம்

## அனுட்டிக்கும் முறைகள்

பரம கருணாநிதியாகிய பரமசிவனுர் திருவருளால ஆயிரத்துத் தொளளாயிரத்து நாற்பத்தெட்டாம ஆண்டு சைவப் பெருமக்களால திருப்பணிச சபை ஆரம்பிக்கப்பட்ட காலமுதல் இன்றுவரை திருக்கேதீச்சரப் பெருமான் ஆலயத்தில் மகா சிவராத்திரி விழா மிகச்சிறப்பாக நடைபெற்று வருகிறது. இதனைச் சைவமக்கள் எல்லோரும் அறிவர். இவ்விழா தமிழ்நாடெங்கணும் கொண்டாடப்பட்டு வருகிறது. திருக்கேதீச்சரம் ஏனைய சிவாலயங்களுக்கெல்லாம் ஒரு முன்மாதிரியைக் காணபிக்கிறது. ஈழ மக்களின் பெருவாழ்வாக அமைந்த தலம் இதுஎன்று கூறுதலும் மிகையாகாது சர்வ நாடுகளிலுமுள்ள சைவ மக்களுக்கெல்லாம் அருளைப் பொழிந்து அருளாளியாகித் திகழச்செய்யுந் தலம் சிறப்பும் செல்வமுமாகும். இத்தகைய மகா புண்ணிய தலத்தில் பக்த கோடிகள் சிவராத்திரி விரதமிருந்து கேதீஸ்வர நாதரை வழிபாடுசெய்வது பூர்வ புண்ணிய தபோபலமாகும். சைவர்களாலும்

தென்மயிலை
தி. செ. கோவிந்தசாமி

வைஷ்ணவர்களாலும் போற்றப்படுகின்ற கன்னியாகுமரி தீர்த்தத்தில் சங்கரர், சைதனியர், விவேகானந்தர் முதலான வடநாட்டுத் துறவிகள் தீர்த்தமாடி உளம் தெளிந்து சிவனை வழிபட்டார்களெனக் கூறுவதுபோல் கேதீச்சரப் பாலாவியிலும் பலர் தீர்த்தமாடித் தம் பிணிகளை மாற்றியிருக்கிருர்கள். இது யாம் நேர் அனுபவத்திற் கண்ட விஷயமாகும். ஆதலால் இத்தலத்தில் விரதமிருக்கும் சைவமக்கள் எல்லோரும் மனம் பொறி வழிபோகாது நிற்றல வேண்டும். உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் மூன்றினலும் கடவுளை விதிப்படி மெய்யன்போடு வழிபடல வேண்டும். இதுவே விரதலக்கணமாகும்.

இனி எங்கள் அருட்குரவராகிய ஸ்ரீலஸ்ரீ நாவலர் பெருமான் அவர்கள் சிவராத்திரி விரதத்தைக் குறித்துக் கூறிய பொன்னுரைகளையும் இங்கே காட்டுதும். அது "சிவராத்திரியெனபது மாசிமாதத்துக் கிருஷ்ண பக்ஷ சதுர்த்தசி திதியிலே சிவபெருமானைக் குறித்து அநுட்டிக்கும் விரதமாம், இதல் உபவாசஞ் செய்து நான்குயாமமும் நித்திரையின்றிச்சிவபூசை செய்தல் வேண்டும். நான்கு யாம பூசையும் அவ்வக்காலத்திற் செய்வது உத்தமம். ஒரே காலத்திற் சேர்த்துச் செய்வது மத்திமம். பரார்த்தம் ஆன்மார்த்தம்என்னும் இர

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோடு
இல. 61032
உரும்பராய் சின்னத்தம்பி சின்னப்பு வழக்காளி (மரணம்)
உரும்பராய் சின்னத்தம்பி நாகரத்தினமும்

2 பெண் மகேஸ்வரியும்
பதில் வழக்காளிகள்
சண்டிருப்பாய் வல்லிபுரம் நடராசா எதிரி

குறித்த கோட்டார் மேற்குறித்த இலக்க வழக்கில் எனக்கனுப்பிய கமிஷன் கட்டளைப்பிரகாரம் இதன் கீழ்க்காணப்படும் ஆதனம் 1956-ம் ஆண்டு ஏப்பிறில் மீ 7-ந் திகதி சனிக்கிழமை காலை 10 மணி துவக்கம் குறித்த காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

சுதுமலை தெற்கு
மானிப்பாய்
1956-ம் ஆ பெபுருவரி மீ 15 உ
பெ. முத்துத்தம்பி
வெண்டிஸ் கமிஷனர்

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிமேற்கு, மானிப்பாய்க் கோவிற்பற்று நவாலியிலுறை வட்டக்கிராய வயல்நெல் பர 30) முப்பதுளல்லைகிழக்கு ஒழுங்கை வடக்கு ஆறுமுகம் பெண் நல்லம்மாவின் ஆதனம் மேற்கு வெள்ள வாய்க்கால் தெற்கு தில்லையம்பலம் தம்பையாவின் ஆதனம் இதடங்கலிற் சொரியலாயமைரவாசி.

பெ முத்துத்தம்பி
கமிஷனர்
15-2-56
M 232 2-3 (௹ 100)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. 11816
செல்லப்பா ராசதுரையும்
பெண் மகேசுவரி
வட்டுக்கோட்டை கிழக்கு
வழக்காளிகள்,
எதிர்

அந்தோனி யோன் அல்லது
தம்பி ஐயா வண்கிழக்கு
எதிராளி

யாழ்ப்பாணம் பெரியகோட்டின் 11816ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1956 ஹூ சித்திரைமீ 7உ சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### காணி விபரம்

யாழ்ப்பாணம் கரையூரில் சீமோன் சுவிரேு தோட்டம் எனனும் காணி நீ இ 4 குளி $2\frac{1}{2}$ இதில் வடக்குப் புறமாக நிந்தமாய் நீ இ 2 குளி $1\frac{1}{4}$ ஐந்து அடி அகலமுள்ள பாதையும மிகுதி காணியில் மேற்குப்புறமாக தென்மேற்கு புறமாக பிரசித்தஒழுங்கைக்குப் போகும் ஒழுங்கை இந்த நீ இ 2 குளி $1\frac{1}{4}$ம் வீடும், கிணறும் மற்றும் அதற்குச் சேர்ந்தவைகளும் எல்லை கிழக்கு மிகுதிக் காணி P. D. சவிரிமுத்துவும பெண்ணும் ரேமன் கதோலிக்க விசுப்பாண்டவரின் ஆதனமும்.

வடக்கு கிறிஸ்டியன் பெண் மேரி யோசுவின்

மேற்கு J. E. பற்றிக்கும் C. F. மாட்டினும் ஒழுங்கையும்.
தெற்கு மிகுதிக்காணி

வ. அ. துரையப்பா
கொமிஷனர்.
யாழ்ப்பாணம், 20-2-56.
M 233 2-3-56 (௹ 100,


## விளம்பரம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை அங்கத்தவராகவும், அதன் தலைவராகவும் பல்லாண்டுகளாகப் பெருந் தொண்டாற்றிய பெரியார் **ஸ்ரீ இ சிவகுருநாதர் M.B.E. அவர்களுக்கு** ஓர் ஞாபகச்சின்னம் அமைப்பதுபற்றி ஆராயும் பொருட்டு நிகழும் மன்மத ஹூ மாசி மீ 20 உ (3—3—56) சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு ஷை சபை நாவலர் மண்டபத்தில் ஓர் பகிரங்கக் கூட்டம் நடைபெறும்.

அத்தருணம் தயவுசெய்து கூட்டத்துக்குச் சமுகம்வித்து ஆகவேண்டிய ஒழுங்குகளைச் செய்யும் வண்ணம் அன்பர்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

இங்ஙனம்,
சி. பசுபதிச்செட்டியார்
மு. மயில்வாகனம்
ஷை கூட்ட அழைப்பாளர்கள்.

வண்ணார்பண்ணை,
1-3-56.

## யாழ்ப்பாணம் ஐக்கியசாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
**6,63,13,00**
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

**பங்குப்பணங்கட்டுமுறை.**

மாசமொன்று 1ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

**தினசரிப்பற்றுவரவு.**

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.**

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்.**

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும், தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள செய்யப்பட்டிருக்கின்றன,

இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.


**கடன்.**

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும், முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14 20-11-46—20-11-49.





மனத்தொடு வாய்மை மொழியிற் றவத்தொடு
தானஞ் செய்வாரிற் றலை

சைவபரிபாலன சபையில்

# திருவள்ளுவர் திருநாள்

2-ம் பக்கத்தொடர்ச்சி

### நீர்வேலியில்

நீர்வேலி ஸ்ரீ சுப்பிரமணிய சனசமூக நிலையத்தில் திருவள்ளுவர் திருநாள் வலிகாமம் கிழக்குக் காரியாதிகாரி திரு எஸ். சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. யாழ்ப்பாணப்பிரிவுக்கூட்டு நீதிபதி திரு. என். சிவஞான சுந்தரம் அவர்கள் திருக்குறளின் பெருமைபற்றியும் திருக்குறள் காட்டும் வழியில் வாழ்க்கை நடத்துவதனுல் வரும் பெரும்பயன் பற்றியும் விளக்கி அரிய சொற்பொழிவொன்றாற்றினுர்.

செல்வி பத்மாவதி பஞ்சநதேசுவரன் "வள்ளுவரும் பெண்களும்" என்ற பொருள்பற்றிப் பேசினுர்.

திருக்குறள் மனனப் போட்டிப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

### வேலணையில்

வேலணை மத்திய கல்லூரி ஆதரவில் திருவள்ளுவர் திருநாள் கொண்டாட்டம் ஆசிரியர் திரு. எஸ் ஆர். பிள்ளை தலைமையில் நன்கு நடைபெற்றது. அத்தருணம் பேச்சுப் போட்டி ஒன்று நடைபெற்றுப் பரிசில்கள் வழங்கப்பெற்றன.

### பருத்தித்துறையில்

புலோலி கிழக்கு, திருவள்ளுவர் நூல் நிலையத்தில் திருவள்ளுவர் விழா சிறப்பாக நடைபெற்றது. திரு. சி. சுப்பிரமணியம் திரு. க. சோமசுந்தரம் ஆகியோர் சொற்பொழிவாற்றும்போது பிரதிநிதிகளாவோருக்குத் திருக்குறள் அறிவும் அதற்குத் தகுந்த வாழ்க்கையும் வேண்டுமென்றும், பிள்ளைகள பொருளறிந்து திருக்குறளை மனனம செய்யப் பழக்கவேண்டுமென்றும் குறிப்பிட்டார்கள்.

### திக்கத்தில்

திக்கம் வாலிபர்சங்க ஆதரவில் வடமராட்சிக் காரியாதிகாரி திரு இ. சிதம்பரப்பிள்ளை தலைமையில் திருவள்ளுவர் திருநாள் கொண்டாடப்பெற்றது. ஆசிரியர் திரு. வே. நடராசா, திரு எஸ், கணபதிபபிள்ளை, வித்துவான் ஆறுமுகம் முதலியோர் சொற்பொழிவுகள் ஆற்றினுர்கள். தமிழ் மக்களின் முற்கால வாழ்க்கை முறையுடன் இக்கால வாழ்க்கை முறை ஒப்பிடப்பட்டு எங்கள் வாழ்க்கை முறை திருத்தப்படவேண்டிய தேவை வற்புறுத்தப்பட்டது.

### நேருவை அழைக்கின்றது அமெரிக்கா

அமெரிக்க சனுதிபதி ஈசன்ஹோவர் பண்டித நேரு அவர்களை அமெரிக்காவுக்குப் போய் வரும்படி அழைத்திருக்கின்ருராம். அந்த அழைப்பை ஏற்றதோடு சனுதிபதி ஈசன்ஹோவரை இந்தியாவுக்கு வரும்படி நேரு அவர்கள் அழைத்திருக்கின்ருராம்.

### போட்டிச் சின்னங்கள்

பாராளுமன்றப் போட்டிக்கு வேண்டப்படும் சின்னங்கள கட்சிக்கொன்ருகக் குறிக்கப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு ஐ தே. கட்சிக்கு யானை மகாசன எக்சத் பெறமுன (ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, தொழிற் கட்சி — பாஷைப் பெரமுன - இலங்கை சமசமாசக் கட்சி (பிலிப் குணவார்தன) என்பவற்றின் தொகுதி)—கை.

இலங்கை சமசமாசக்கட்சி- திறப்பு. பொதுவுடைமைக் கட்சி—நட்சத்திரம். சமஷ்டிக் கட்சி—வீடு, ஏனைய கட்சிகளுக்கு இன்னும் தீர்மானஞ் செய்யப்படவில்லை.

### கொழும்பு நகரசபைத் தலைவர்

கலாநிதி என். எம். பெரேரூவை நகரசபைத் தலைவர் பதவியிலிருந்து நீக்கும் பிரேரணை கொழும்பு நகரசபையில் இரு மேலதிக வாக்குகளால் அங்கீகரிக்கப்பட்டது. பிரேரணைக்குச் சாதகமாய் 16 வாக்குகளும் பாதகமாய் 14 வாக்குகளும் கொடுக்கப்பட்டனவாம்.

வண்ணை
வைத்தீயேசுவரசுவாமிகோயில்

### மகோற்சவம்

வண்ணை ஸ்ரீ வைத்தியேசுவரசுவாமி கோயிலில் மாசி 23-ந் திகதி (6-3-56) செவ்வாய்க்கிழமை இரவு 7 மணி தொடக்கம் மகோற்சவ ஆரம்பக் கிரியைகள் நடைபெற்று மாசி 25 உ (8-3-56) வியாழக்கிழமை பகல 12 மணியளவில் கொடியேற்றத் திருவிழா நடைபெறும். பங்குனி 12உ (25-3-56) ஞாயிற்றுக கிழமைதேர்த்திருவிழாவும், பங்குனி 13 உ (26-3-56) திங்கட்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறும். உற்சவ காலத்தில நாள்தோறும் மாலையில் உபந்நியாசங்கள் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் நக்ஷத்திரம்?

எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

இவ்வாரப் பலன்கள், 4—3—56 —— 10—3—56

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

முதல் இரு நாட்களும் தொந்தரவாயிருக்கும். வரவு செலவைச் சமாளிக்கமாட்டாது வருந்துவீர். வாரமிகுதி நல்லதாயிருக்கும். ஆனால் தேகசுகம் இன்னமும் சிக்கலாகவே யிருக்கும்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசிரிடம், 1, 2-ம் பாதம்.

புதுமுயற்சிக்கு ஞாயிறும் திங்கள் காலையும் நல்லவையாயிருக்கும். திங்கள் மாலையும் செவ்வாய் புதனும் கவனமாய்க் கழிக்கவேண்டும். வாரமிகுதி திருப்பவும் நன்றாகும். ஆனால் மனச்சமாதான மிருக்கமாட்டாது.

**மிதுனராசி** மிருகசிரிடம், 3,4 திருவாதிரை, புனர்பூசம் 1,2,3

சொந்தக்கருமங்களுக்கும் பணக்கருமங்களுக்கும் மூன அனைவாரம் நல்லதாயிருக்கும். வியாழன் வெள்ளியும் சனிகாலையும் உம்மைத்தொந்தரவுகளுக்குட் செலுத்திவிடும். மற்றவர்களுடைய கருமங்களில் ஈடுபடாதிருக்கவும்.

**கடகராசி** புனர்பூசம் 4ம்பாதம் பூசம் ஆயிலியம்.

ஒரு நல்லவாரம். உம்மோடு போட்டியிடுவோரை நீர் வெல்லக்கூடியதாயிருக்கும். இனத்தவர்கள் அதிக உதவியாயிருப்பர். தனலாபமும் நிச்சயம். ஆனால் தேகசுகம் சிறிதும் நல்லயிருக்கமாட்டாது

**சிங்கராசி** மகம், பூரம், உத்தரம், 1ம் பாதம்.

இந்தவாரம் இனத்தவர்களுடன் சண்டைகளுக்கிடமுண்டு. தேகசுகமும் நல்லயிருக்கமாட்டாது. அபாயங்களைப்பற்றி எச்சரிக்கையாயிருக்கவும். ஒன்றையும் புதியதாய்த் தொடங்கவேண்டாம். வாரஇறுதியில் சில தனலாபங்கள் வரும்.

**கன்னிராசி** உத்திரம் 2,3,4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

உம்முடைய குடும்பப் பகுதியில் இந்தவாரம் திருத்தம் நிச்சயம். புதுமுயற்சிகள் சித்தியாகும். நடுவாரத்தில் நண்பருடன் சண்டைகளுக்கிடமுண்டு.

**துலாராசி** சித்திரை 3,4ம் பாதம். சுவாதி விசாகம் 1,2,3ம் பாதம்

காணிகள் காணிப்பொருள்கள் மூலம் இந்தவாரம் இலாபங்கள் நிச்சயம். குடும்பக் காரியங்களும் திருந்தும். வார இறுதியில் வாக்குவாதம் உம்மைத் தொந்தரவுகளுக்குள்ளாக்கக்கூடும்.

**விருச்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அனுஷம், கேட்டை.

தேகசுகம் சிறிதும் நல்லாயிருக்கமாட்டாது. கண்நோய்களுக்கிடமுண்டு. நண்பர் விசேடமாய்ப் பெண்ணின நண்பர் அதிக உதவியாயிருப்பர், வாரஇறுதியில் பணநெருக்கடி குறையும்.

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம் 1 பாதம்

சுகவீனங்களுக்கிடமுண்டு, நீர் விரைந்து கோபங்கொள்ளுவீர். மேலதிகாரிகள் கீழே வேலை செய்யும் உத்தியோகஸ்தர் ஆகியோருடன் சண்டைகளைத் தவிர்க்கவும். பணத்துறையில் நல்லவாரம்.

**மகரராசி** உத்தராடம் 2,3,4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

செலவதிகரிக்கும், ஆனால் இடைஞ்சல்களிலிருந்து தீவு நண்பர் உதவிசெய்வார்கள், சமூகசித்தியும் புகழும் நிச்சயம். புது முயற்சிகள் கவனமாய்க்கழிக்க வேண்டும்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்.

ஒரு நல்லவாரம் பணநிலைமைகள் திருந்தும். காணிகள் காணிப்பொருள்கள்மூலம் இலாபங்கள் நிச்சயம் புதுமுயற்சிகள் விரும்பிய பலனைத் தரும்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

உம்முடைய சிக்கல்களுட் பல இன்னமும் நீக்கமுடியாமலிருக்கின்றன, ஒன்றையும் புதியதாய்த் தொடங்கவேண்டாம். உம்முடைய முயற்சிகள் எல்லாவற்றிலும் மந்தகதியான முன்னேற்றமேயிருக்கும். ஆனால் நீர் சித்திபெறுதல் நிச்சயம்.

# சிவராத்திரிவிரதம்

—:0:—

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ண்டினும் சிவராத்திரி நான்கு யாம பூசையிலே சூரியதேவர் முதலிய பரிவாரங்களுக்கும் சோமாஸ்கந்தமூர்த்தி முதலிய தெய்வங்களுக்கும் பூசை செய்ய வேண்டுவதில்லை. பரார்த்தத்திலே மகாலிங்க முதலிய மூலமூர்த்திகளுக்கும், ஆன்மார்த்தத்திலே மகாலிங்கத்துக்கும் மாத்திரம் பூசைசெய்யக் கடவர். பரார்த்தம் ஆன்மார்த்தம் என்னும் இரண்டினும் விநாயக கடவுளுக்கு மாத்திரம் நான்கு யாமமும் பூசை செய்யலாம். சண்டேசுர பூசை நான்கு யாமமும் செய்தல் வேண்டும். சிவ பூசையில்லாதவர், நித்திரையின்றிச் ஸ்ரீ பஞ்சாட்சர செபமும் சிவபுராண சிரவணமும்செய்து நான்கு யாமமும் சிவாலய தரிசனம் பண்ணுதல் வேண்டும். இதில் உபவாசம் உத்தமம். நீரேனும் பாலேனும் உண்பது மத்திமம். பழம் உண்பது அதமம். தோசை முதலிய பணிகாரம் உண்பது அதமாதமம். சிவராத்திரி தினத்திலே இராத்திரியிற் பதினான்கு நாழிகைக்குமேல் ஒரு முகூர்த்தம் லிங்கோற்பவ காலம். நான்கு யாமமும் நித்திரையொழிக்க இயலாதவர் லிங்கோற்பவ காலம் நீங்கும் வரையுமாயினும் நித்திரையொழித்தல் வேண்டும். இக்காலத்திலே சிவதரிசனம் செய்வது உத்தமோத்தம புண்ணியம்" என்பதாகும். இச்சிவராத்திரி விரதஞ்சைவசமயிகள் யாவராலும் அவசியம் அநுட்டிக்க வேண்டியது. ஆதலால் சைவமக்கள் யாவரும், விரதம் அநுட்டிப்போர்களும் இந்த முறையைக் கைவிடாது அநுட்டிப்பரேல் நற்கதியடைவர்.

—

## சைவப் பிரசங்கம்

—

நாள்: மன்மத ஞு மாசிமீ உ௨ உ (4-3-56) ஞாயிற்றுக்கிழமை

இடம்: சைவபரிபாலன சபை நாவலர் மண்டபம்

நிகழ்ச்சிகள்

இரவு 6-30—7-30 கடவுளாராதனை

திருப்புகழ்ப் பாராயணம்

திரு. வி. தருமலிங்கம்

7-0—8 30 விரிவுரை

"அருணகிரிநாதர்"

திரு. பொ. அப்புக்குட்டி அவர்கள்

சைவாபிமானிகள் யாவரும் சமூகமளிப்பார்களாக,

மு. மயில்வாகனம்

சமயப்பிரசார அமைச்சர்

சைவ பரிபாலன சபை

யாழ்ப்பாணம்

28-2 56.

## திருக்குறட் போட்டித் தேர்வு விளக்கம்

—0—

திருக்குறட் போட்டித் தேர்வுக்கு எத்தகைய வினாக்கள் கொடுக்கப் படும்? திருக்குறள்களின் கருத்தைப்பற்றியும் கேட்பீர்களா? கருத்தும் படிக்க வேண்டுமா? — இவ்வாறு பல வினாக்களைத் தேர்வுக்குத் தோற்றும் அன்பர்களும் அவர்களைப் பயிற்றும் ஆசிரியர்களுங் கேட்டு அடிக்கடி எமக்குக் கடிதம் எழுதுகிறார்கள். ஆகவே அவர்களுக்கும் பிறருக்கும் பயனளிக்கத்தக்கதாகப் பின்வரும் அறிக்கையை வெளியிடுகிறோம்.

வினாக்கள் யாவும் திருக்குறட் செய்யுள்களைப் பற்றியனவாகவே யிருக்கும்.

கருத்தை விளக்கிய பின்பன்னஞ் செய்வது இலகுவாகவிருக்கும் என்பதை யாவரும் அறிவர். அன்றியும் குறள்களைப் பிழையின்றிப் பாடமாக்குதற்கும் எழுதுதற்கும் அவற்றின் கருத்தை அறிந்திருத்தல் இன்றியமையாதது. தேர்வுக்குத் தோற்றுபவர்கள் பிழைகளின்றி விரைவாகவும் தெளிவாகவும் எழுதல் வேண்டும். குறள்களை எழுதிப் பயின்று [illegible] அறிவித்தருகின்றனர்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

—

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோடு

மானிப்பாய் தாமுவேலுப்பிள்ளை — வழக்காளி

விரோதமாக

இல M. B 334

சண்டிருப்பாய் நாகலிங்கம் சிதம்பரநாதர் மைம்பெண் தங்கம்மா — எதிராளி

குறித்த கோட்டார் மேற்குறித்த இலக்க வழக்கில் எனக்கு அனுப்பிய கமிஷன் கட்டளைப் பிரகாரம் இதன்கீழ்க் காணப்படும் காணிகள் 1956ம் ஆண்டு எப்பிறில் மாதம் 21ந் திகதி சனிக்கிழமை காலை 10 மணி துவக்கம் முறையே அந்தந்தக் காணிக்குள்ளும் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிமேற்கு மானிப்பாய்க் கோவிற்பற்று சண்டிருப்பாய் இறை சிரணிவளவு நில பா 4-ம் (நாலும்) கிணற்றிற் பங்கும் எல்லை கிழக்கும் வடக்கும் வயித்திலிங்கம் நடராசாவுக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனம். மேற்கு கதிர்காமர் மயில்வாகனத்திற்கும் இராமு மூத்தவுக்கும் உரிய ஆதனங்கள். தெற்கு கனகசிங்கம் காப்பெல்றர் பெண் நல்லம்மாவுக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனங்கள். இடங்கலும் இக்காணி E 293/291ல் பதியப்பெற்றது.

2 மேற்படி இறை உவாய்கின்ற வளவு நி பா 4½ம் வீடும், கிணற்றிற் பங்கும் வான்செய் பயிர்களும், எல்லை கிழக்கும் தெற்கும் சபாபதி பெண் அன்னப்பிள்ளையின் ஆதனம். வடக்கு ஆறுமுகம் விஞ்சித்தம்பியின் ஆதனமும் கையொழுங்கை முகப்புமேற்கு ஆறுமுகம் அம்பலவாணரினுதனமும் சின்னத்துரை பெண் பொன்னம்மாவினுதனமும் இடங்கலும், இது E 164/254ல் பதியப்பெற்றது.

3 மேற்படி சண்டிருப்பாயிறை "பெத்தான்கிராய்" நி இல 4ம் கிணறும் எல்லை கிழக்கு முருகேசு சரவணையினுதனம். வடக்குரோட்டு. மேற்கு முருகேசு நமசிவாயத்துக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனம். தெற்கு முத்துபெண் சின்னப்பிள்ளையின் ஆதனம் இடங்கலில் வேறு மற பங்காளருக்குரிய வழி வாய்க்கால் பாவிப்புரித்துடன் குறித்த கிணற்றில் அரைவாசிப்பங்கும் புறநீங்கலாக மிகுதி முழுவதும் இது E 57/84ல் பதிவு செய்யப்பெற்றது,

4 ஷை இறை "மாதாக்கையும்" மாதாக்கை தெற்கு வளவும் நில பா 9ம் குழி 10ம் வான் செய்பயிர்களும். எல்லை கிழக்கு பொன்னம்பலம் சிவசம்புவுக்கும் பங்காளருக்குரிய ஆதனம் வடக்கு ஒழுங்கை. மேற்கு சின்னத்தம்பி சுப்பிரமணியத்துக்குரிய ஆதனம். தெற்கு ஐயனார் கோவிலுக்கும் அமிர்தலிங்கம் மைம்பெண் தங்கம்மாவுக்குமுரிய ஆதனங்கள் இடங்கலில் மேற்செல்லைக்காணிக்கு இக்காணிக் கூடாகச் செல்லும் வழி வாய்க்கால் புறநீங்கலாக சொரியலாய் நாலில் மூன்று பங்கு ($\frac{3}{4}$) பங்கு இது E 156/5ல் பதியப்பெற்றது.

5 மேற்படி இறை "மாரியன் தோட்டமும்" 'பெரிய மாரியன் தோட்டமும்" நெல் பரப்ப இருபத்தெட்டரை ($28\frac{1}{2}$) எல்லை கிழக்கு நாகர் பொன்னம்பலத்தினுதனம் வடக்கு பொன்னையா பெண் சின்னம்மாவுக்கும் அம்பலவாணி திருவேங்கடனுக்குமுரிய ஆதனங்கள், மேற்கு செல்லப்பா மைம்பெண் பொன்னம்மாவுக்குரிய ஆதனம். தெற்கு ஆறு வாய்க்கால். இடங்கலில் சொரியலாய் ($\frac{3}{4}$) நாலில்மூன்று பங்கு. இக்காணி E 293/292ல் பதிவுசெய்யப்பெற்றது.

பெ. முத்துத்தம்பி

வெந்திஸ் கமிஷனர்

சுதுமலை தெற்கு

மானிப்பாய் 1956-ம் ஆ

பெப்பிரவரி மீ 27௨

M234 2 3 56 (ரூ 200)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

—

இல, 11714

காரைதீவு கிழக்கு களபூமி

1. வேலுப்பிள்ளை சண்முகம் பெண்
2. சரஸ்வதியும்

வழக்காளிகள்

எதிராக

வண்ணார்பண்ணை கிழக்கு கன்னாதிட்டி

1. தம்பு நடேசுவும் பெண்
2. தையல்முத்துவும்

சுதுமலை தெற்கு

3. இளையதம்பி விசுவநாதனும் பெண்
4. சின்னத்தங்கச்சியும்

எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 11714-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் முதலாம் துண்டுக்காணி முற்பகல் 9 மணிக்கும் இரண்டாந் துண்டுக்காணி முற்பகல் 10 மணிக்கும் சித்திரை மாசம் 12-ந் திகதி வியாழக்கிழமை 1956-ம் ஆண்டு அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### காணிகள் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை மேற்கு இறை இளஞ்சிங்கவேளாவிதவை 17 குளியும் வீடும் கிழக்கெல்லையிலிருக்கும் கிணற்றிலரைவாசியும் எல்லை கிழக்கு ஆறுமுகம் இராசேந்திரத்துக்கும் பங்காளருக்குமுடைய வாதனமும் வடக்கு நாகலிங்கப் பத்தர் செல்லையாப் பத்தருக்கும் பங்காளருக்குமுடைய வாதனங்கள். மேற்கு தம்புநாதர் தம்பிப்பிள்ளைக்குடையவாதனம், தெற்கு ஒழுங்கை இடங்கலும் அத்துடன் ஒழுங்கையில் ஒரு பங்கு இக்காணிக்குச் சேர்ந்தது. இக்காணி D 203/96ம இலக்கப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டது.

2 ஷை நல்லூர்க் கோவிற்பற்று நல்லூர் இறை சூரியன் வளவும விளாத்தியடியும் நி, பரப்பு $1\frac{1}{2}$ம் கிழக்கெல்லையிலிருக்கும் கிணற்றில் அரைவாசியும், எல்லை கிழக்கு வேலுப்பிள்ளை கணபதிப்பிள்ளையினுதனம், வடக்கு சின்னத்தம்பி முருகேசுவினுதனம், மேற்கு செல்லையா பெண் காமாட்சியினுதனம். தெற்கு ஒழுங்கை, இக்காணி D 208/97-ம இலக்கப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டது

S. Ratnasabathy

கொம்மிஷனர்

51, 4th Cross Street

Jaffna 27-2-56

M 235 2-3 (ரூ 200)

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் நாவலர்வீதி 245-ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. சுப்பையர் பொன்னம்பலம் சர்மையா அவர்களால் 2-3-56 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org